## "கொட்டியாக்கும்புற முஸ்லிம்களிடையே நிலவும் கலப்புத் திருமணங்கள்"

**Supervisor**
*R.A.Sarjoon*
*Lecturer (Prob),*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

**Researcher**
*Ms. W.A.Fazila*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

இவ்வாய்வானது "கொட்டியாக்கும்புற பிரதேச முஸ்லிம்களிடையே நிலவும் கலப்புத் திருமணங்கள் ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் கள ஆய்வாக விளங்குகின்றது. சப்பிரகமுவ மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள கேகாலை மாவட்டத்தில், யடியந்தொட மற்றும் கலிகமுவ ஆகிய இரு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள, முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற ஒரு பிரதேசமாக கொட்டியாக்கும்புற காணப்படுகின்றது. இங்கு சுமார் 500 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இங்கு வாழும் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினத்தவரோடும் ஏனைய சிறுபான்மையினத்தவரோடும் கூட்டாக இணைந்து வாழ்கின்றனர். இந்நிலையால் இப்பிரதேசத்தில் கலப்புத் திருமணங்கள் இடம்பெற்று வருகின்றன. இம்மக்களது கலப்புத் திருமணங்கள் பற்றிய விபரங்களை வெளிக் கொணரும் வகையில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது. இப்பிரதேசத்தை மையப்படுத்திய மேற்படி தலைப்பு தொடர்பான எந்த ஆய்வுகளும் இதுவரை எவராலும் மேற்கொள்ளப்படவில்லை.

கொட்டியாக்கும்புற பிரதேச முஸ்லிம்களிம்களிடையே நிலவும் கலப்புத் திருமணங்களை கண்டறிதல், அவை இடம்பெறுவதற்கான காரணிகளைக் கண்டறிதல், கலப்புத் திருமணங்கள் மேலும் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா என்பதனை ஆராய்தல், கலப்புத் திருமணங்கள் இடம்பெறாது தவிர்ப்பதற்கான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் முன்மொழிதல் மற்றும் கொட்டியாக்கும்புற பிரதேச முஸ்லிம்களிடையே நிகழும் கலப்புத் திருமணங்களை அடையாளப்படுத்துவதுடன் அது சம்பந்தமான விடயங்களை ஆவணப்படுத்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

இது ஓர் சமூகவியல் ஆய்வு என்பதனால் அளவு மற்றும் பண்புசார் முறைமை இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, முறையைப் பயன்படுத்தி எழுமாற்று மாதிரி எடுப்பின் மூலம் 30 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றில் 25 வினாக்கொத்துக்கள் மீளப்பெறப்பட்டு அதனடிப்படையிலும், இப்பிரதேசத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள், முக்கிய பிரமுகர்கள், விவாகப் பதிவாளர் போன்றோருடனான கலந்துரையாடல்கள், அவதானிப்புக்கள், நேர்காணல்கள், போன்றவற்றில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பின்னணியிலும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளாக: இவ்வாய்வு தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், அறிக்கைகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ள. இவ்வாய்வில் ஆய்வுப்பிரதேச முஸ்லிம் சமூகத்தில் இடம்பெறும் கலப்புத் திருமணங்கள் பற்றிய விபரங்கள் கண்டறியப்பட்டு அவை இடம்பெறுவதற்கான காரணிகளாக சமூக, சமய, கலாசார,

பொருளாதார, உளவியல் போன்ற காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன. கலப்புத் திருமணங்களினால் முஸ்லிம் சமூகம் மற்றும் கலப்புத் திருமண புரிந்த தம்பதிகள் எதிர்கொண்ட சாதக பாதகமான தாக்கங்கள் இனங்காணக்கூடியதாகவுள்ளது. மேலும் இத்திருமணங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பான அம்சங்களை இனங்காணக்கூடியதாக இருந்தது.

எனவே நோக்கங்களை மெய்ப்பிக்கும் வகையில் இவ்வாய்வானது சிறப்புற அமையப் பெற்றுள்ளது. இவ்வாய்விலிருந்து கொட்டியாக்கும்புற முஸ்லிம்களிடையே நிலவும் கலப்புத் திருமணங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் கலப்புத் திருமணங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு இவ்வாய்வு பயனுடையதாக அமையும்.

***Key Words:*** திருமணம், கலப்புத் திருமணம், முஸ்லிம், கொட்டியாக்கும்புற